**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 21.06.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : .06.2018 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சி ஆணையரது பிப்ரவரி 2018, மார்ச் 2018, ஏப்ரல் 2018 மற்றும் மே 2018 மாத நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/3230/14)

**தீர்மானம் எண். 328**

அனுமதிக்கப்பட்டது

(2) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் திருத்தம் செய்து பிரசுரம் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசிதழ் எண். 33 நாள் 25.01.2018–இன்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சியில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)சி–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்துவரி விதிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)சி–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும், கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)சி–ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பது தொடர்பாக நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேலும், அறிவிப்பு தொடர்பாக ஆட்சேபணைகள் எதுவும் வரப்பெறவில்லை. எனவே, மாவட்ட அரசிதழில் வெளியிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(அ1/543/18)

**தீர்மானம் எண். 329**

அனுமதிக்கப்பட்டது

(3) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளில் விடுபட்ட பகுதிகளில் 4.00 கி.மீ. தூரம் கழிவுநீர் குழாய் அமைத்து இரண்டு நீரேற்று ஆள்நுழைவு தொட்டிகள் மற்றும் இரயில்வே இருப்புப்பாதை அடியில் இரண்டு இடங்களில் குழாயமைக்கவும், 5000 வீட்டு இணைப்புகள் வழங்கவும் தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு `. 540.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், நிர்வாக அனுமதி பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், நகராட்சியில் போதிய நிதி இல்லாததால் திட்ட மதிப்பீட்டுத் தொகை `. 540.00 இலட்சத்தினை அரசிடமிருந்து முழு மான்யமாக அனுமதிக்க கோரும் பிரேரணை அனுப்பவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) விடுபட்ட பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்க்கொள்ள `. 540.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி கோரும் பிரேரணை அனுப்பவும்,
ஆ) திட்டத் தொகையினை அரசு மான்யமாக அனுமதிக்க கோரும் பிரேரணை அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1473/18)

**தீர்மானம் எண். 330**

அனுமதிக்கப்பட்டது

(4) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான வாகனம் JCB TN 28 AZ 0778 வாகனப் பழுதுகளை சரி செய்வதற்கு CAG Construction Equipment Private Limited, Salem – 4 என்ற நிறுவனத்திற்கு `. 125000/–க்கு மன்ற அனுமதி வழங்கி உள்ளது. ஆனால், கூடுதலாக மேற்படி நிறுவனத்திடமிருந்து `. 85200/–க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, கூடுதலான தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/837/18)

**தீர்மானம் எண். 331**

அனுமதிக்கப்பட்டது

(5) இந்நகராட்சியில் தூய்மை பாரதம் திட்டத்தின்கீழ் தட்டான்குட்டை உரக்கிடங்கில் `. 99.25 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்டப் பணிகளை செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க. எண் 11088–16/2017/பி3 நாள் 24.05.2017–இல் திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

Construction of Municipal Solid Waste Processing facilities including

| | | | |
|---|---|---|---|
| i) | Construction windrow compost platform & providing Leahete Management system | - | Rs. 55.00 Lakhs |
| ii) | Construction of 1/3rd roof for Compost platform | - | Rs. 26.25 Lakhs |
| iii) | Construction of processing shed | - | Rs. 18.00 Lakhs |
| | **Total** | **-** | **Rs. 99.25 Lakhs** |

மேற்கண்ட அனுமதியின்படி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் கடித எண். 2829/2016/டிஓ1 நாள் 14.07.2017–இல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 04.08.2018–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் நாமக்கல் கன்ஷ்ரக்சன் என்ற நிறுவனம் வழங்கிய மதிப்பீட்டை விட 4.98% கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை இந்நகராட்சி நகர் மன்ற தீர்மான எண். 191 நாள் 30.08.2017–இன்படி ஏற்று பணியாணை 14.09.2017–ஆம் தேதி வழங்கப்பட்டுள்ளது. பணியை துவங்கப்பட்ட நிலையில் இனி வருங்காலங்களில் நகராட்சிப் பகுதிகளில் குப்பைகளை உரமாக Processing Machineries-க்கு பதில் Micro Compost முறையில் குப்பைகளை உரமாக்க அறிவுரை வழங்கப்பட்டது.

அதன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட `. 99.25 இலட்சம் மதிப்பீட்டில் உள்ள பணிகளுக்கு பதில் நகராட்சிப் பகுதிகளில் கீழ்கண்ட இரண்டு இடங்களில் 5 மெ.டன் அளவு கொண்ட Micro Compost Centre அமைக்க முடிவு செய்யப்பட்டது.

1) நகராட்சி தட்டான் குட்டை உரக்கிடங்கு
2) தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்புப் பகுதி

மேற்கண்டப் பணியினை மேற்க்கொள்ள திருத்திய மதிப்பீடு `. 99.25 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. அதை மேற்கண்ட ஒப்பந்ததாரர் தான் அளித்துள்ள விலை விகிதத்தில் செய்து தரவும், மேலும், கூடுதல் இனங்களை மதிப்பீட்டு விலை விகிதத்தில் செய்து தரவும் நாமக்கல் கன்ஷ்ரக்சன் நிறுவனத்தால் ஒப்புதல் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார்கள்.

எனவே, மேற்கண்ட திருத்தியப் பணியினை பணித்தாள் (Work slip) நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் அனுமதி பெற்று மேற்கண்ட ஒப்பந்ததாரர் மூலமாக பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) திருத்தியப் பணியினை நிர்வாக அனுமதி தொகையான `. 99.25 இலட்சம் மதிப்பீட்டில் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2) திருத்தியப் பணியினை செய்ய தயார் செய்யப்பட்ட பணித்தாள் (Work slip) நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் அனுமதி பெற்று செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்கண்ட திருத்தியப் பணியை நாமக்கல் கன்ஷ்ரக்சன் மூலமாக பணியினை மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1308/16)

**தீர்மானம் எண். 332**

அனுமதிக்கப்பட்டது

(6) இராசிபுரம் நகராட்சியில் துப்புறவுப் பணியாளராக பணிபுரிந்த திரு எம். பழனிசாமி, த/பெ. மாரிமுத்து வயது முதிர்வின் காரணமாக 31.1.2018–இல் பணியிலிருந்து ஓய்வு பெற்றது. சிறப்பு சேமநலநிதி நிர்வாக பங்குத் தொகை `. 10000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/1185/18)

**தீர்மானம் எண். 333**

அனுமதிக்கப்பட்டது

(7) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 25, 26, 27 பகுதிகளுக்கு ஆழ்துளைக் கிணற்றுத் தண்ணீர் செல்லும் பிவிசி குழாய்கள் நெடுஞ்சாலைத் துறை எல்லை வரை சாலை விரிவாக்கம் செய்யும் பணி மேற்கொண்டதால் பயன்படுத்த இயலாத நிலையில் சேதமடைந்துள்ளது. அதற்கு பதிலாக புதிய 63mm HDPE குழாய்கள் மற்றும் கேட் வால்வுகள் அமைக்க ஆகும் செலவினம் `. 120000/– மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (இ2/401/18)

**தீர்மானம் எண். 334**

அனுமதிக்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சியிலுள்ள ஐந்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்து பராமரிக்க தேவையான 1 மெ.டன் (1000 கிலோ) பிளீச்சிங் பவுடர் சேலம், பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடியில் வாங்க ஆகும் உத்தேச செலவினம் `. 24000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1306/18)

**தீர்மானம் எண். 335**

அனுமதிக்கப்பட்டது

(9) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளிலுள்ள ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் திறந்த வெளிக் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின் விசைப்பம்புகள் மற்றும் நீர்முழ்கி விசைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் பொது மக்களுக்கு தண்ணீர் வழங்க ஆகும் மதிப்பீடு `. 800000/– செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (இ2/1305/18)

**தீர்மானம் எண். 336**

அனுமதிக்கப்பட்டது

(10) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 22 மாணிக்கம் மருத்துவமனை எதிரிலுள்ள ஆழ்துளைக் கிணற்றிலிருந்து, வார்டு எண். 19, 20, 21 மற்றும் 22 பகுதிகளுக்கு தண்ணீர் செல்லும் குழாய்கள் நெடுஞ்சாலைத் துறை சாலைகளை எல்லை வரை அகலப்படுத்துவதால் சேதமடைந்துள்ளன. எனவே, புதிய 90mm HDPE குழாய்கள் அமைத்து தண்ணீர் வசதி

செய்யும் `. 140000/– மதிப்பீட்டு பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1303/18)

**தீர்மானம் எண். 337**

அனுமதிக்கப்பட்டது

(11) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 4 மற்றும் 8 வை.ரா. ரத்தினம் மனைப்பிரிவு மற்றும் எல்லப்பா தெரு பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் நீட்டிப்பு செய்யும் பணி மதிப்பீடு `. 23000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1291/18)

**தீர்மானம் எண். 338**

அனுமதிக்கப்பட்டது

(12) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளிலுள்ள ஆழ்துளைக் கிணற்று மின்மோட்டார்கள் பழுதுகள் ஏற்படுவதால், புதிய 5 குதிரைத்திறன் நீர் மூழ்கி மின் மோட்டார்கள் 5 எண்ணிக்கை வாங்க ஆகும் உத்தேச செலவினம் `. 285000/– மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (இ2/1304/18)

**தீர்மானம் எண். 339**

அனுமதிக்கப்பட்டது

(13) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தற்சமயம் 90 துப்புறவுப் பணியாளர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர். அனுமதிக்கப்பட்ட துப்புறவுப் பணியாளர் பணியிடம் 135 ஆகும். 45 துப்புறவுப் பணியாளர்கள் பணியிடம் காலியாக உள்ளன. இராசிபுரம் நகராட்சியில் மிக குறைந்த துப்புறவுப் பணியாளர்கள் பணிபுரிவதால், வீடு வீடாக குப்பைகள் தரம் பிரித்து வாங்கும் பணிகளையும், சாக்கடை சுத்தம் செய்யும் பணிகளையும் மேற்கொள்வது மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, பொதுமக்களிடத்தில் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுவதோடு, பலவித தொற்று நோய்களும் பரவ வாய்ப்புள்ளது.

மேலும், அரசாணை எண். 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.04.1997–இன்படி இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு 216 துப்புறவுப் பணியாளர்கள் தேவைப்படுகின்றது. மேலும், நகராட்சியில் நிகர செலவினம் 49 சதவிதத்திற்கு அதிகமாக இருப்பதால் காலிப்பணியிடங்களை நிரப்ப தடையாணை உள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடித ந.க.எண் 27/P3/2012 நாள் 06.01.2012–இன்

படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை தனியார் மூலம் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, இராசிபுரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை சிறப்புடன் செயல்படுத்தும் வகையில் வார்டு எண். 1,2,3,4,5,6,7,8 மற்றும் 9 ஆகிய 9 வார்டுகளில் குப்பை தரம் பிரித்து வாங்கும் பணி, சாக்கடை சுத்தம் செய்யும் பணி மற்றும் உரம் தயாரிக்கும் பணி ஆகிய பணிகளை தற்போது, **Out Sourcing** மூலம் 40 துப்புறவுப் பணியாளர்களைக் கொண்டு துப்புறவுப் பணி மேற்கொள்ளவும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனுமதிக்கும் ஊதிய விகிதத்தில் நகராட்சியின் நிதிநிலைமைக்கேற்ப அரசு விதிகளின்படி நியமித்து பணியினை மேற்கொள்ளவும், மேற்படி திட்டம் செயல்படுத்துவதற்கு ஏற்படும் அனைத்து செலவினத்தை செய்திட ஆகும் உத்தேச மதிப்பீடு ஓராண்டிற்கு `. 60/– இலட்சம் தொகையினை திடக்கழிவு மேலாண்மை நிதி மற்றும் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினங்களை திடக்கழிவு மேலாண்மை நிதி மற்றும் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(எச்1/1475/18)

**தீர்மானம் எண். 340**

அனுமதிக்கப்பட்டது

(14) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 17 பரசுராமன் தெருவில் 1000 லிட்டர் சின்டெக்ஸ் தொட்டி வைத்து குழாயமைத்து தண்ணீர் வசதி செய்யும் `. 40000/– மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/664/18)

**தீர்மானம் எண். 341**

அனுமதிக்கப்பட்டது

(15) இந்நகராட்சிக்கு தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தில் நகர்ப்புற சுகாதார மையம் `. 42.00 இலட்சத்தில் புதியதாக கட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து பணி மேற்கொள்ளஒப்பந்தப்புள்ளி கோரி விளம்பரம் வெளியிடப்பட்டது. விளம்பரம் பிரைட் அட்வர்டைசிங் மூலமாக வெளியிடப்பட்டமைக்கு உரிய கட்டணம் கீழ்க்கண்டவாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | முதல் அழைப்பு | 3.5.2018 | – | `. 5198/– |
| 2) | 2–ஆம் அழைப்பு | 2.6.2018 | – | `. 5198/– |
| | | **மொத்தம்** | **–** | **`. 10396/–** |

மேற்கண்ட தொகை `. 10396/–ஐ உரிய நிறுவனமான பிரைட் அட்வர்டைசிங் ஆயிரம் விளக்கு, சென்னை – 600 006–க்கு வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/197/18)

**தீர்மானம் எண். 342**

அனுமதிக்கப்பட்டது

ஒம்/— ப. கிருஷ்ணமூர்த்தி,
தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.